SOCIAL JUSTICE
DECENT WORK

Press Release

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) சமூக நீதி மற்றும் ஏற்புடைய தொழில் என்பவற்றை மேம்படுத்தும் தன் பயணத்தின் நூறாவது ஆண்டை நிறைவு செய்கின்றது**

- *ILO இனது நூற்றாண்டு விழாவை முன்னிட்ட தேசியக் கொண்டாட்டங்களை உள்ளடக்கிய நேரடியான 24 மணித்தியால "உலக சுற்றுலாவுக்கு" தெரிவு செய்யப்பட்ட 187 அங்கத்துவ நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.*
- *கட்டாய ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தொழில் நெறிமுறையான P-29 ஐ குறியீட்டு ரீதியாக இலங்கை ஏற்றுக்கொண்டமை நிகழ்வின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது. இவ் அனுமதியைப் பெற்றுத்தந்த தெற்காசியாவின் முதலாவது நாடு மற்றும் ஆசியாவின் இரண்டாவது நாடு இலங்கை மட்டுமே.*
- *ILO இனது 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட இலங்கை தொழிலாளர் வர்த்தமானியின் விசேட வெளியீடு ஒன்றும் அன்றைய நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது.*

***2019 ஏப்ரல் 11 வியாழன். கொழும்பு, இலங்கை:*** *24 மணித்தியாலங்கள். 24 நகரங்கள். 24 நிகழ்வுகள். ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த, விசேடத்துவ முகவரான சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) தனது நூற்றாண்டு நிறைவை உலகளாவிய ரீதியில் அபிமானத்துடன் கொண்டாடியது. உலகமெங்கும் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட இந்த 24 மணித்தியால உலகப் பயணம் ஃபிஜியின் சூவாவில் ஆரம்பமாகி, கொழும்பு, புது டெல்லி, பெய்ரூட், கெய்ரோ மற்றும் ஏனைய நகரங்களைக் கடந்து சென்றதோடு ILO இனது செயற்பாடுகளின் பரிமாணத்தையும் பன்முகத்தன்மையையும் 24 மணித்தியாலங்களில் காட்சிப்படுத்தும் விதமாக அமைந்திருந்தது.*

*இலங்கையில், ILO தனது 100 வருட நிறைவை கோலாகலமான நூற்றாண்டு விழாவுடன் கொண்டாடியதோடு, இந்நிகழ்வு தொழிற்துறையின் எதிர்காலம் குறித்த கருப்பொருளின் கீழ் திறன்மிக்க இளம் இலங்கையர்களின் பிரதான பங்களிப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.*

*கட்டாய ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தொழில் நெறிமுறையான P-29 ஐ குறியீட்டு ரீதியாக இலங்கை ஏற்றுக்கொண்டமை நிகழ்வின் ஒரு முக்கிய அம்சமாகும். இந்நிகழ்வில் இராஜதந்திரிகள், சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், தொழில் வழங்குனர்களின் பிரதிநிதிகள் மற்றும் தனியார் துறை அமைப்புகள், அபிவிருத்திப் பங்காளர்கள், இலங்கை முழுதும் முன்னெடுக்கப்பட்ட ILO செயற்திட்டங்களின் பயனாளர்கள், முன்னைய மற்றும் தற்போதைய ILO ஊழியர்கள் மற்றும் ஊடகங்கள் என அதிகளவிலானோர் பங்கேற்றிருந்தனர். இந் நெறிமுறைக்கு அனுமதியளித்த தெற்காசியாவின் முதலாவது நாடு மற்றும் ஆசியாவின் இரண்டாவது நாடு இலங்கை மட்டுமே.*

*இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர ஆகியோரின் முன்னிலையில் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.*

*ILO இல் அங்கத்துவம் வகிக்கும் 187 நாடுகளில் 24 மணித்தியால நேரடி உலகளாவிய கொண்டாட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட 24 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். உலகெங்குமுள்ள பார்வையாளர்கள் இலங்கையின் நடனம், கலப்பு ட்ரம் வாத்தியங்கள் மற்றும் நிழல் நாடகம் ஆகிய ஆக்கங்களின் ஊடாக இலங்கையின் வாழ்த்துச் செய்தியைப் பெற்றுக்கொண்டனர். பிரகாசமான தொழில் எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணம் என்பதை உள்ளடக்கமாகக் கொண்டிருந்த இவ் ஆக்கங்களை ILO இனது முத்தரப்பு பங்காளர்கள் உருவாக்கியிருந்தனர். நாடளாவிய ILO செயற்திட்டங்களின் பயனாளர்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டிருந்ததோடு, வெவ்வேறு மாவட்டங்களில் ILO இனது மகத்தான பங்களிப்பை வெளிப்படுத்தும் தனிப்பட்ட அனுபவங்களையும் உத்வேகமளிக்கும் கதைகளையும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.*

*விருப்பத்துடன் ஆற்றப்படாததும் கட்டாயப்படுத்தலின் பேரில் செய்விக்கப்படுவதுமான ஊழியத்தை குற்றமாகக் கருதி, வழக்குத்தொடுத்து, அதனைத் தடுக்க வினைத்திறனான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமாறு நாடுகளுக்கு வலியுறுத்தும் சர்வதேச தொழில் நெறிமுறையான P-29 ஐ குறியீட்டு ரீதியாக இலங்கை ஏற்றுக்கொண்டமை நிகழ்வின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது. P-29 இற்கு ஒப்புதல் அளிக்கும் நாடுகள் சாட்சியங்களுக்கான பாதுகாப்பு மற்றும் பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ள வழிசெய்வதோடு இழப்பீடுகளையும் பெற்றுத்தருதல் வேண்டும்.*

*தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கத் தொடர்புகள் அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர கருத்து தெரிவிக்கையில் “100 வருடங்களை நிறைவு செய்யும் ILO இற்கு வாழ்த்துக்கள். நூற்றாண்டு நிறைவு தொடர்பான உலகளாவியக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதையிட்டு நாம் பெருமிதம் கொள்கின்றோம். 1948 ஆம் ஆண்டு முதல் இலங்கையானது ILO அங்கத்துவத்தைக் கொண்டிருப்பதோடு, கட்டாயத் தொழில், நவீன அடிமைத்துவம், ஆட்கடத்தல்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் என்பவற்றை இல்லாதொழித்திட உலகளாவிய ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைமை தாங்கும் ILO உடன் நீண்ட காலமாக ஒத்துழைப்பதை முன்னிட்டு நாம் மிகுந்த பெருமிதம் கொள்கின்றோம்” என்று குறிப்பிட்டார்.*

*ILO இனது 100 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்ட இலங்கை தொழிலாளர் வர்த்தமானியின் விசேட வெளியீடு ஒன்றும் நிகழ்வில் இடம்பெற்றது. தொழிலாளர் வர்த்தமானியானது இலங்கையின் தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிலாளர் புள்ளிவிபரங்கள் பற்றிய தொழிலாளர் அமைச்சின் காலாண்டு வெளியீடாகும். தபால் மற்றும் தபால் சேவைகள் அமைச்சின் உதவியோடு தபால் முத்திரையொன்றும் முதல் நாள் உறை ஒன்றும் நிகழ்வின்போது வெளியிடப்பட்டன.*

*ILO இனது நூற்றாண்டு விழா பற்றி இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ILO காரியாலயத்தின் பணிப்பாளர் திருமதி. சிம்ரின் சிங் கருத்து தெரிவிக்கையில், “உலகளாவிய, நிரந்தர சமாதானத்தை, சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என்பதே ILO இனது பணிப்புரையாகும். கடந்த நூறு வருடங்களாக, சமவாய்ப்புள்ள மற்றும் நேர்மையான தொழிற் சூழலொன்றை உருவாக்குவதற்காக ILO செயற்பட்டு வந்துள்ளது. எமது அனைத்து இலங்கைப் பங்காளர்களும் வழங்கிய ஒத்துழைப்புக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். 100 வருடங்களை நிறைவு செய்யும் எமது பயணத்தின் இத்தருணத்தில் எந்த ஒருவரையும் புறந்தள்ளாத தொழில் எதிர்காலமொன்றை இலங்கையில் கட்டியெழுப்புவதற்கான எமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்கின்றோம்.*

**ILO Office for Sri Lanka and the Maldives**
**202 – 204, Bauddhaloka Mawatha,**
**Colombo 7,**
**Sri Lanka.**

**Tel. +94 11 259 2525**
**Fax. +94 11 250 0865**
**E-mail: colombo@ilo.org**

*மார்ச் மாதம், வட பகுதி மக்களுடன் இணைந்து ILO கொண்டாடியிருந்ததோடு, நூற்றாண்டு விழாவை முன்னிட்ட பல்வேறு செயற்பாடுகளை 2019 ஆம் ஆண்டு முழுவதும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளது. அடுத்த நூற்றாண்டிற்கான தொழில் எதிர்காலமொன்றை வடிவமைப்பதற்கு இலங்கைக்கு உதவிட, இலங்கையின் தொழிற் சூழலை மாற்றியமைத்திடும் வளர்ச்சியடையும் தொழினுட்பங்களின் தாக்கத்தை மதிப்பிட்டு* ***இலங்கையில் தொழிற்துறையின் எதிர்காலம்*** *பற்றிய அறிக்கையொன்றை இலங்கை அலுவலகம் அண்மையில் வெளியிட்டது.*

*மூன்று தரப்பினரைக் கொண்டமைந்துள்ள ஒரேயொரு சர்வதேச அமைப்பு ILO மட்டுமே. இங்கு தொழிலாளர்களும் தொழில் வழங்குனர்களும் பிரதிநிதித்துவம் மற்றும் முடிவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் முன்னிலையில் சரிநிகரான வாய்ப்பை பெற்றுக்கொள்வர். அவர்கள் ஒன்றிணைந்து சுதந்திரம், சமவாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் அனைவருக்குமான மதிப்பு ஆகிய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தொழிலாளர் நிர்ணயங்கள், கொள்கைகளின் விருத்தி, ஏற்புடைய மற்றும் பயனுறுதிமிக்க நிகழ்ச்சித்திட்டங்களின் உருவாக்கம் என்பவற்றைக் கட்டமைப்பர்.*

- நிறைவு -

***ILO பற்றி***

*சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (ILO) உலகத் தொழிற்துறைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்பாகும். சமூக நீதியை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு, நான்கு மூலோபாய பொறிமுறைகளின் அடிப்படையில் ஏற்புடைய தொழிற்சூழலை ஊக்குவிக்கின்றது. அவையாவன: தொழில் உரிமைகள், ஏற்புடைய தொழில் வாய்ப்புகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக உரையாடல்.*

*1919 இல் முதலாம் உலகப்போரின் முடிவுக்கு காரணமான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டதோடு, 1946 இல் ஐக்கிய நாடுகளின் முதலாவது சிறப்பு முகவராக ILO உருவானது. இன்று 100 வருட அறிவு, அனுபவம் மற்றும் அடைவுகளின் பலனைப் பெற்றுத் தருகின்றது.*

*இலங்கை 1948 இல் ILO அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. 1984 இல் கொழும்பில் ILO இன் இலங்கை காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு ILO காரியாலயம் தனது எல்லையை விஸ்தரித்து மாலைதீவையும் உள்ளடக்கியது.*

*2006 முதல் இலங்கை மூன்று ஏற்புடைய தொழில் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து நடாத்தியிருந்தது (DWCPs). தற்பொழுது நடைபெறும் நான்காவது ஏற்புடைய தொழில் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டமானது (2018–2022) மூன்று நாடளாவிய முன்னுரிமைகளைக் கொண்டுள்ளது. அவையாவன நிலைபேறான, உள்ளடக்கமான மற்றும் ஏற்புடைய தொழில்களின் உருவாக்கம், தொழிற் சந்தையில் சிறந்த முறையிலான நிர்வாகம் மற்றும் அனைவருக்கும் தொழில் சார்ந்த உரிமைகள் என்பனவாகும். அத்துடன் சிறப்பான தகவல் மற்றும் அறிவின் உருவாக்கத்தை இந்நிகழ்ச்சித்திட்டங்களில் சாத்தியமான முன்னுரிமையாகக் கொண்டு செயற்படவுள்ளது.*



**ILO Office for Sri Lanka and the Maldives**
**202 – 204, Bauddhaloka Mawatha,**
**Colombo 7,**
**Sri Lanka.**

**Tel. +94 11 259 2525**
**Fax. +94 11 250 0865**
**E-mail: colombo@ilo.org**

*For information only. Not an official record.*

*ILO இனது இலங்கை சமூகப் பங்காளர்களாக தொழிற்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்துறைப் பயிற்சி சார்ந்த அமைச்சுக்கள், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் மற்றும் தொழிற் சங்கங்கள் என்பன செயற்படுகின்றன.*

***மேலதிக விபரங்களுக்கு:***

***திரு. அசித செனவிரத்ன,***

***இலங்கை மற்றும் மாலைதீவுக்கான***

***ILO காரியாலயம் :*** *asitha@ilo.org*

***தொலை: + 94112592525***

***இணையத்தளம்:*** *https://www.ilo.org/colombo/* ***மற்றும்*** *https://www.ilo.org/100/en/*

Press Release



*For information only. Not an official record.*